இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரிகம்!!
ஆதிக்க ஆடைகளி
சோபிக்க சோபை
கோபிராஜ் ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மக்கள் வைபவங்களுக்கு
தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
இருவர்களுக்கான
தெரிவுகளுக்கு
கோபிராஜ் ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 03 வெள்ளிக்கிழமை (17 06 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 201

மதவாச்சி அருகில், கெப்பிட்டிக்கொல்லாவ

# பொலிஸ் காவல் அரணை புலிகள் தாக்கி அழித்தனர்

## 4 பொலிஸார் உயிரிழப்பு எட்டுப் பேரை காணவில்லை

கொழும்பு, ஜூன் 17

வவுனியா மாவட்ட எல்லையில் - மதவாச்சிக்கு அருகிலுள்ள— கெப்பிட்டிக் கொல்லாவ பொலிஸ் காவல் அரண்மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் நான்கு பொலிஸார் கொல்லப்பட்டனர்.

காவலரணின் பொறுப்பதிகாரியான சப் இன்ஸ்பெக்டர் மற்றும் நான்கு கான்ஸ்டபிள்கள் கடுமையான காயங்களுக்கு இலக்கானார்கள். மேலும் எட்டுப் பொலிஸாரை காணவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் குறித்து ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்ததாவது:-

நேற்று அதிகாலை ஒருமணியளவில் இடம் பெற்ற இத் தாக்குதலை 100 க்கு அதிகமான விடுதலைப் புலிகள் நடத்தினர் என்றும் —

தாக்குதலைத் தொடர்ந்து, அக்காவலரணில் காணப்பட்ட 10 லட்சம் ரூபா பெறுமதியான ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றிச் சென்றனர் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் வீதியில் போடப்பட்டிருந்தது என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகள் நடத்திய மோட்டார்த் தாக்குதல் காரணமாக அப்பொலிஸ் காவலரண் நேற்று மாலை வரை எரிந்து கொண்டிருந்தது.

இதேவேளை —

வவுனியா எல்லைப் புறத்தில் காவல் நிலையம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக்காலை நடத்திய தாக்குதலில் 2 பொலிஸாரும் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்டனர் என்

(4ஆம் பக்கம் பார்க்க)

### மூச்சந்தி முரளி



மொத்தத்தில் தென்னிலங்கை அரசியல் வாதிகள் எல்லோரும் குத்துக்கரண வீரர்கள் தான் பாருங்கோ......!

## சுதந்திரக்கட்சி தலைவர்களுடன் பிரேமச்சந்திரா திடீர் சந்திப்பு

### பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை ஆதரிக்க இணக்கம்

கொழும்பு, ஜூன் 17

வடமேல் மாகாண முதலமைச்சரும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுச் செயலாளருமான திரு. ஜி. எம். பிரேமச்சந்திரா நேற்று முன்தினம் மாலை சுதந்திரக் கட்சித் தலைவர்களைச் சந்தித்து விசேட பேச்சுவார்த்தையை நடத்தினார் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பின் பின்னர் வடமேல் மாகாண சபையில் தற்போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து நடத்திவரும் ஆட்சியைத் தொடரப்போவதாக திரு. பிரேமச்சந்திரா அறிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் மூன்று மணியளவில் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தைகளில் சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிரி சேனநாயக்காவும் சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுருத்த ரத்வத்தையும் கலந்து கொண்டனர்.

வடமேல் மாகாண சபையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஐ. தே. க பிரமுகரான காமினி ஜயவிக்கிரம

(4ஆம் பக்கம் பார்க்க)

ஆளுநர் பதவி பறிபோன

## சர்வானந்தாவுக்கு சு. க. அழைப்பு!

கொழும்பு, ஜூன் 16

மேல் மாகாண ஆளுநர் பதவியில் இருந்து ஜனாதிபதியால் அகற்றப்பட்ட திரு. எஸ். சர்வானந்தாவை சுதந்திரக் கட்சியில் சேருமாறு அக்கட்சித் தலைமைப்பீடம் அழைப்பு விடுத்திருக்கிறது.

இத்தகவலை 'த ஐலண்ட்' வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை —

திரு. சர்வானந்தா பதவி நீக்கம் செய்யப்பட்டதை லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன கூட்டாக கண்டித்துள்ளன.

மேல் மாகாணத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சியைக் கவிழ்க்க ஆளும் கட்சி மேற்கொண்ட சதி இது என்று இவ்விரு கட்சிகளும் குற்றஞ்சாட்டியுள்ளன.

(ஐ-எ)



## மாஹோ கப்பல் நாளை திரும்பும்

வடமராட்சி, ஜூன் 17

மண்எண்ணெய் இறக்கி முடித்ததைத் தொடர்ந்து, மாஹோ கப்பல் நாளை சனிக்கிழமை பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டுச் செல்லும்.

இக்கப்பல் திருகோணமலைக்குச் சென்று அங்கிருந்து ஒரு தொகுதி மாவுடன் மீண்டும் இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ-173)

## மக்கள் வங்கிப் பரீட்சையில் சித்தி பெற்றோர் பட்டியல்

### அரச அதிபர் எடுத்து வந்தார்

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ். மாவட்டத்தில் மக்கள் வங்கிக் கிளைகளில் வெற்றிடமாகவுள்ள எழுதுநர் மற்றும் பதவிகளுக்கு ஆட்களைச் சேர்ப்பதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களின் பட்டியல் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரால் இங்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

வங்கிக் கிளைகளில் உள்ள வெற்றிடங்களின் விவரம் பெறப்பட்ட பின் சித்தியடைந்தவர்களின் விவரங்கள் வெளியிடப்படும் என யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

(இ 5)

புலிகளின் நிபந்தனையற்ற பேச்சு

## கருத்துத் தெரிவிக்காமல் அரச தரப்பினர் மௌனம்

கொழும்பு, ஜூன் 17

நிபந்தனைகளின்றி பேச்சுவார்த்தை நடாத்தத் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் சார்பில் அதன் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் அறிவித்திருப்பது குறித்து, கொழும்பில் இராணுவம் கருத்து வெளியிடுவதில் எச்சரிக்கையாக உள்ளதாக தூரகிழக்கு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது செய்தியறிக்கையில் தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் அறிவிப்பை கவனத்துக்கு எடுத்துக் கொண்டதாக மட்டுமே இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

அரச தரப்பில் இருந்தும் எந்தக் கருத்தும் வெளியிடப்படவில்லை என்றும் அச் செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

(இ-எ)

பேராசிரியர் துரைராசாவின் இறுதிச்சடங்குகள் நேற்று முன்தினம் வதிரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற வேளை —

பேராசிரியரின் துணைவியார் தமது கணவரின் பூதவுடலுக்கு மலர்மாலை அணிவிப்பதை அருகில் உள்ள படத்தில் காணலாம்.

இறுதிச் சடங்குகளைத் தொடர்ந்து நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் —

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அங்கு இரங்கலுரை ஆற்றுவதையும் கீழுள்ள படங்களில் காணலாம்.

# பேச்சுக்கான சூழ்நிலையை உருவாக்குவது அரசின் கையில்

### பி. பி. ஸிக்கு தமிழ்ச்செல்வன் பேட்டி

லண்டன், ஜூன் 17

பெரியதொரு படை எடுப்பிற்கான ஆயத்தங்களை அரசு செய்வதாகவே தெரிகிறது. எனவே பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை உருவாக்குவது அரசின் கைகளிலேயே உள்ளது.

யாழ்ப்பாணம் வந்திருந்த பி. பி. ஸி. யின் கொழும்பு செய்தியாளர் ஜோர்ச் ஆன்விக்கு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போர் நிறுத்தத்துக்கு நாம் தயாராக இருப்பதாக பல தடவைகள் பகிரங்கமாக அறிவித்துள்ளோம். கடந்த 3 வருடங்களாக இங்கு வந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிங்களப் போர்க்கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம்

### மீண்டும் ஆரம்பிக்க போவதாக அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

விடுதலைப் புலிகளிடம் போர்க் கைதிகளாக இருக்கும் சிங்களப் பொலிஸார் தாம் மீண்டும் சாகும் வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப்போவதாக அறிவித்துள்ளனர்.

வெரித்தாஸ் வானொலி தமிழ்ச் செய்தியில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

தம்மை விடுவிக்க ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால், சாகும்வரையான உண்ணாவிரதம் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதை தவிர்க்க முடியாதது என்றும் அவர்கள் தமது உறவினர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

(ஐ-5)

## தென்னிந்திய திரைப்படங்கள் தடை குறித்து பரிசீலனை

லண்டன், ஜூன் 17

"தென்னிந்திய திரைப் படங்களைத் தடை செய்வது குறித்து நாம் பரிசீலனை செய்துவருகிறோம்"

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் பி. பி. ஸி யின் கொழும்பு செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியில் இதனை வெளியிட்டுள்ளார்.

அநேகமான தென்னிந்தியத் தமிழ் படங்கள் எமது பண்பாட்டு வாழ்வை சீர்குலைக்கும் அம்சங்களைக் கொண்டவையாக இருக்கின்றன.

தமிழீழ மக்களின் பண்பாட்டு வாழ்விற்கும், வளர்ச்சிக்கும் குந்தகமாக அவை அமையும் என நினைக்கிறோம். பாலியல் வன்முறை, கொலை, கொள்ளை மற்றும் மனித மேம்பாட்டிற்கு தீங்கு விளைவிக்கும் பல்வேறு அம்சங்களை அந்தப் படங்கள் கருப்பொருளாகக் கொண்டுள்ளன.

— தென்னிந்தியத் திரைப் படங்களைத் தடை செய்துவிட்டு எமது திரைப்படத்துறையை பெரிய அளவில் வளர்க்கத் தீர்மானித்துள்ளோம். புரட்சிகரமான சிந்தனை, சமூக மேம்பாட்டினை இலக்காகக் கொண்ட திரைப்படங்களைத் தயாரித்து மக்களுக்கு வழங்குவதே எமது நோக்கம்.

— இவ்வாறு திரு தமிழ்ச்செல்வன் பி. பி. ஸிக்கு விளக்கமளித்தார்.

(இ-5)

## "நரோமா" கப்பல் பயணிகள் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், ஜூன் 17

18 ஆம் 21 ஆம் திகதிகளில் "நரோமா" கப்பலில் பயணம் செய்ய பணம் செலுத்தி பதிவு செய்த பயணிகளை நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தில் சமுகமளிக்குமாறு யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

(ஐ-5)

## பிரேமச்சந்திரா அணியின் மாநாடு: தடை உத்தரவு

கொழும்பு ஜூன் 17

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள பிரேமச்சந்திரா அணி இம்மாதம் 18 ஆம் திகதிக்கும் 25 ஆம் திகதிக்கும் இடையில் நடத்துவதற்கு இருந்த முன்னணியின் மாநாட்டை நடத்தக் கூடாது என்று கல்கிசை மாவட்ட நீதிமன்றம் இடைக்

(4ஆம் பக்கம் பார்க்க)

காமினி, றொனி உட்பட

# 3 அமைச்சர்கள் இன்று பதவி ஏற்பு

கொழும்பு, ஜூன் 17

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த அமைச்சரவை மாற்றம் இன்று இடம்பெறலாம் என்று பி. பி. ஸி. நேற்றுத் தெரிவித்தது.

புதிதாக காமினி திஸநாயகா, றொனி டி மெல், காமினி ஜயவிக்ரம பெரேரா ஆகியோர் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்றும் —

தற்போது அமைச்சர்களாக உள்ள எவரும் விலக்கப்பட மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு முன்னர் தமது அமைச்சரவையைப் பலப்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் ஜனாதிபதி அமைச்சரவையை மாற்றி அமைக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ)

## மகாவலி அபிவிருத்தி அமைச்சராக காமினி

காமினி திஸநாயக்கா மீண்டும் மகாவலி அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார்.

இவருக்கு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சு வழங்கப்படும் என்று முன்னர் தெரிவிக்கப் பட்டிருந்ததாயினும் —

இப்போது கிடைத்துள்ள நம்பத்தகுந்த செய்திகளின்படி அப்பதவி வழங்கப்படமாட்டாதெனத் தெரியவந்துள்ளது.

(இ-எ-6)

## றொனிக்கு திட்டமிடல் அமைச்சு

றொனி டி மெல் திட்டமிடல் அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பொது நிர்வாக அமைச்சராக உள்ள பெஸ்டல் பெரேரா மீண்டும் கடற்றொழில் அமைச்சராக நியமிக்கப்பட இருக்கிறார் என்று தெரிய வருகிறது.

தற்போது அமைச்சர்களாக உள்ளவர்களிடம் உள்ள அமைச்சுகளில் சிறிய மாற்றங்கள் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய அமைச்சர்களை விலக்குவது எதிர்வரும் தேர்தல்களின் போது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதாலேயே புதிதாக அமைச்சர்களை நியமிப்பதைவிடுத்து, இருக்கும் அமைச்சர்களின் கைவைப்பதில்லை என்று ஜனாதிபதி முடிவெடுத்துள்ளார் என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது.

(இ-எ-6)

## தமிழ் நாட்டில் ஹர்த்தால்

தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இன்று தமிழ்நாட்டில் 12 மணிநேர ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

(இ)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கடைப்பாவனைக்குரிய சோக்கேஸ் விற்பனைக்கு உண்டு: தொடர்பு: நொதேன் சார்ஜெஸ், 54, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி அருகில், யாழ்ப்பாணம். (7451)

நல்ல இன அழகான பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: திருமதி சு. புஸ்பநாயகம், "புதுவனவு", பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (31446)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை, ஆறுகால்மடத்தடியில் மாநகரசபை எல்லைக்குள் வீடுகள் கட்டக்கூடியதும் தென்னை பயிரிடக் கூடியதுமான 28 பரப்பு வயல் காணி விற்பனைக்குண்டு. உடன் தொடர்புகொள்ளவும். மு. விஜயகோபால், சே/பா செ. தங்கராஜா (கட்டடக் கலைஞர்), இல: 958/9, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (31445)

### இலகு திருமண சேவை

31 வயது, அவிட்டம், உதயச்செவ்வாய், கனடாவில் Technical Programmerக்கும், 28 வயது, மிருகசீரிடம், கனடாவில் Accountancy படித்து தொழில்புரிபவருக்கும் மணப்பெண்கள் தேவை. இலகு திருமணம், விமலா, நாச்சிமார் கோயிலடி. (31449)

### புலமைப் பரிசில் பரீட்சை

Bond நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள் எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். கணிதம், தமிழ் விடைகளுடன் ரூபா 10/- மட்டும். (7445)

### கலைவியியல்

கலைவியியல் கட்டுரைகள் சோ. சந்திரசேகரம் விலை 110/- இலங்கையில் கல்வி, இலங்கையில் கல்வி கட்டுரை தொகுப்பு: சோ. சந்திரசேகரம். மா. கருணாநிதி விலை 120/- விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (கி-8271)

## புளியங்குளத்தில் உள்ளூர் பொருள் விற்பனை நிலையம்

வவுனியாமாவட்டம்புளியங்குளத்தில் உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை நிலையம் ஒன்று சித்திரைப் புது வருடதினத்தன்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிலையத்தில் பப்படம், தயிர், பாய், உப்பு, ஓடு, நல்லெண்ணெய், நெய், முட்டை, போன்ற உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

பொருளாதாரத் தடையின் சுமையினால் அல்லற்பட்டு வாழும் இப்பகுதி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நடவடிக்கையாகவும், உள்ளூர் பொருட்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடனும் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வவுனியாக் கோட்டம் இந்த நிலையத்தினூடாக இப்பொருட்களை விற்பனை செய்து வருகின்றது: இதன் மூலம் உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு நல்ல விற்பனை வாய்ப்பு ஏற்பட்டு வருவதுடன் இந்த உள்ளூர் உற்பத்தியில் ஈடுபடுவோருக்கு தொழில் வாய்ப்பும் ஏற்பட்டு வருகிறது. (ஈ)

## சாவகச்சேரி பஸ் நிலையம் புனரமைப்பு

சாவகச்சேரி, ஜூன் 17

கடந்த காலங்களில் நடந்த இராணுவ நடவடிக்கைகளாலும், விமானக் குண்டு வீச்சுக்களாலும் சேதமடைந்திருந்த சாவகச்சேரி பஸ் தரிப்பு நிலைய கொட்டகைகள் சாவகச்சேரி நகரசபை நிர்வாகத்தால் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

மேற்படி திருத்த வேலைகளுக்கு சுமார் ஒரு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நகரசபை செயலாளர் திரு. கி. நடராசா தெரிவித்தார். (ஓ-31)

## பொற்காலமன்றோ!

கடலெனப் பரந்த அன்பு
கருணையே நிறைந்த நெஞ்சு
இடரென வருவார்க் கெல்லாம்
ஈய்ந்திடும் கர்ணன் வாழ்வு
சுடரென நெடுந்தீ லங்கை
துலங்கிட முதற் பெண்ணாக
அட; அவள்தந்த செங்கோல்
அது பொற்கால மன்றோ!

— நெடுந்தீவு லக்ஸ்மன்.

(இலங்கையில் முதல் கிராம சபைத் தலைவியாக பதவி வகித்த நெடுந்தீவுக் கிராமசபையின் முன்னாள் தலைவி

திருமதி செல்லம்மா நாகேந்திரரின்

ஐந்தாம் ஆண்டு நினைவு நாளையொட்டி) [31436]

## நன்றி நவிலல்



| அன்னை மடியில்: | இறைவன் அடியில்: |
|---|---|
| 14 | 18 |
| 04 | 05 |
| 1927 | 1994 |

### அமரர் செல்வரெட்ணம் தியடோர்

(சுகாதாரப் பரிசோதகர்)

பால்போன்ற வெள்ளையுள்ளம்
பண்பான இனியபேச்சு
ஆல்போன்ற நெஞ்சுரத்தால்
அன்பான இனியவல்லல்
செல்வரத் தினமாய் மண்ணில்
சிறப்புக்கள் பலவும் பெற்று
செம்மையாய் அறுபத்தேழு
செழுமிய வருடம் வாழ்ந்து
தங்கமணி நல்லாளோடு
இல்லறம் இனிதுபேணி
இசைவாக மகவுமூன்றை
ஏற்றதாய் வளர்த்துக்காத்து
அடைக்கல மரியாளருகே
அமைதியாய் சிலநாள் வாழ்ந்து
மிடுக்கொடு விண்ணகத்துள்
விரைந்திட்டார் நீடுவாழி!

இவரின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்ட நண்பர்கள், உறவினர்கள், அனுதாபச்செய்தி அனுப்பியவர்கள், தலையாழி நண்பர்கள் மற்றும் பலவழிகளில் உதவிசெய்த யாவர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மனைவி, மக்கள்:

இல. 153, ஆஸ்பத்திரி வீதி,
(சென் பீற்றர்ஸ் லேன்,)
யாழ்ப்பாணம். [31452]

## 31ஆவது நாள் நினைவஞ்சலி



திருமதி

### இரத்தினேஸ்வரி கோபாலசிங்கம்

மலர்வு: 20-10-1941

உதிர்வு: 18-05-1994

கணவரதும் மக்களதும் நலனுக்காகக்
காலமெல்லாம் உழைத்ததொரு அழகுச் செல்வி
மணம் முடித்த நாள் முதலாய் கணவன் சொல்லை
மந்திரம் போற் காத்து நின்ற புனிதமங்கை
தினமும்இறை பதம் பணிந்து குடும்பம் வாழத்
தெய்வ அருள் வேண்டிநின்ற தேவமாதா
கனவதுவாய்ப் போன இரத்தினேஸ்வரி
சங்கரன்தாள் சார்ந்தாள் சரண்.

என்றும் உங்கள் நினைவில் வாடும்;
கணவர், பிள்ளைகள், தாய்,
சகோதரர்கள், சகோதரிகள்,
சுற்றத்தார்.

குமரகோட்டம்,
கோண்டாவில். (31455)

## மைதான இடமாற்ற அறிவித்தல்

யாழ். இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் 19-06-1994 ஞாயிறன்று நடைபெறவிருந்த யாழ். அரசடி வீதி, ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலையினரின் விளையாட்டுப் போட்டி அதேதினத்தில் யாழ். இந்துமகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

அரசடி வீதி ஞானக்குழந்தை இல்ல
பாலர் பாடசாலை ஆசிரியைகள்.

16-06-1994. (31457)

## உ
## உபநயன அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ மங்களகரமான பவ ஹு ஆனி மீ 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (19-06-94) சித்திரை நட்சத்திரமும் சித்தயோகமும், மிதுனலக்கினமும் கூடிய காலை 6 மணிக்கு மேல் 8 மணிக்குள் வரும் சுப வேளையில்,

எமது கனிஷ்ட புத்திரன்
திருவளர் செல்வன்

### ஸ்ரீ நிகேதன்

பிரம்மோபதேச, யக்ஞோபவீததாரணம் (உபநயனம்) பெற ஸ்ரீ பாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமான் திருவருள் துணை கொண்டு நிச்சயிக்கப் பட்டிருப்பதால் மேற்படி தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவுள்ள வைபவத்தில் கலந்து தங்கள் ஆசியையும், அன்பையும், ஆதரவையும் நல்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
சோ. இ. பிரணதார்த்திஹரக் குருக்கள்
பி. சுகந்திகுந்தளாம்பிகை.

ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில்,
(சிவன் கோயில்)
வண்ணை. (31451)

## நீர்ப்பாசன தொழில்நுட்பவியலாளர்கள் உடன் தேவை

தாயக பொருண்மியத்தை வளர்க்கும் நோக்குடன் நாம் துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தை அமுலாக்க உள்ளோம். இதை இனிது நிறைவேற்ற எமக்கு பின்வரும் அனுபவசாலிகள் உடன் தேவைப்படுகின்றனர்.

நீர்ப்பாசன பொறியியலாளர்கள்

நீர்ப்பாசன தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்

நீர்ப்பாசன தொழில் மேற்பார்வையாளர்கள்

நீர்ப்பாசன படவரைஞர்கள்

தகைமையுடையவர்களுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும். பெருநிலப்பரப்பில் வேலை செய்ய தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மேலதிக ஊக்குவிப்பு பணமும் கொடுக்கப்படும்.

உங்கள் அனுபவம் பற்றிய சான்றிதழ்களுடன்

இன்று
வெள்ளி (17-06-94)
காலை 10 மணிக்கு
கீழ் உள்ள விலாசத்தில் எம்முடன்
தொடர்பு கொள்ளவும்.

உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ
பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
இல, 10, செம்பியன் வீதி,
கொக்குவில். [கி-8452]

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில்: | தாயக மண்ணில்: |
|---|---|
| 17 | 17 |
| 10 | 06 |
| 1975 | 1991 |

இளம்புலி கீதா

### செல்வி தர்ஷனி திருச்செல்வம்

திதி: 14-07-1994

திருச்செல்வம்
குடும்பத்தினர் (31450)

## ஜனாதிபதியிடம்
## அரசுப் பத்திரிகைகளுக்கு எதிராக ஹமீது முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 17

அரசுக்கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகள் தமக்கு எதிரான செய்திகளைப் பிரசுரித்தது குறித்து வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் முறையிட்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் ஐரோப்பிய பொருளாதார நாடுகள் அமைப்புடன் பொருளாதார உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட அமைச்சர் ஹமீது தவறிய விவகாரம் தொடர்பான செய்திகளை அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகளும் பிரசுரித்தன. இது சிரேஷ்ட அமைச்சர்களுக்கே ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி

கே. சி. சி. சி. வெற்றிக் கிண்ணத்திற்காக நான்காவது ஆண்டாக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட (30) ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கழகங்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| விண்ணப்பம் முடிவு திகதி:- | 22-06-1994 (புதன் கிழமை) |
| போட்டி ஒழுங்குத் தெரிவு:- | 23-06-1994 (வியாழக்கிழமை) |
| போட்டி ஆரம்பம்:- | 26-06-1994 (ஞாயிற்றுக்கிழமை) |

- கே. சி. சி. சி. விளையாட்டுக் கழகம் [8510]

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
லியோ கழகம்,
சுன்னாகம் லயன்ஸ்
கழகத்துடன் இணைந்து நடத்தும்
யாழ். மாவட்டப் பாடசாலை
மாணவர்களுக்கிடையிலான

## உதயன் சுற்றுக் கிண்ணத்திற்கான பொது அறிவுப் போட்டி - 1994

மேற்படி போட்டிக்கான விதிமுறைகள்

1. ஒரு பாடசாலையிலிருந்து எத்தனை மாணவர்களும் பங்குபற்றலாம்.
2. மாணவர் ஒருவருக்கு ரூ. 15 மட்டும் விண்ணப்பக் கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
3. விண்ணப்பப்படிவத்தில் மாணவர் முழுப்பெயர், கற்கும் ஆண்டு, பாடசாலையின் பெயர், பிறந்த திகதி, அதிபரின் உறுதிப்படுத்தல் ஆகிய விடயங்கள் அடங்கியிருத்தல் வேண்டும்.
4. விண்ணப்ப முடிவுத் திகதி 23-06-1994 வியாழக்கிழமை பி. ப. 2 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.
5. விண்ணப்பங்கள் யாவும் தலைவர்/செயலர், லியோ கழகம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
6. எழுத்துப் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்படும்.
7. இறுதிப் போட்டிக்குத் (வாய்மூல வினா விடை) தெரிவாகும் முதல் 18 மாணவர்களுக்குப் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

தங்கள் ஆதரவை நாடித் தங்கள் பாடசாலையையும் பங்குபற்றிச் சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

-நன்றி-

(கி/8511)

## 31ஆம் நாள் நினைவலைகள் (17-06-1994)



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 06 | 18 |
| 07 | 05 |
| 1917 | 1994 |

திருமதி

### தாமோதரம்பிள்ளை நல்லம்மா

எம் நெஞ்சக் கோயிலிலே
இனிய தெய்வமாயமர்ந்து
தெம்புடனே நாம் வாழத்
திறம் நற்பணியாற்றி
தும்பி போலப் பறந்திட்ட
தூய எங்கள் தெய்வத்தை
கும்பிட்டு அஞ்சலித்தோம்
குணம் போற்றி வணங்குகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கற்குழி வடக்கு,
சாவகச்சேரி. (31456)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இரு திறமைகள் வேண்டும்

எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் தமது கட்சி வெற்றியீட்டுவதும், விடுதலைப்புலிகளுடன் நிபந்தனை எதுவுமின்றித் தாம் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று சந்திரிகா குமாரணதுங்கா தகவல் வெளியிட்டிருக்கிறார்.

இத்தகவலை அவர் உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை. யாழ்ப்பாணம் வந்திருக்கும், பி. பி. ஸியின் சிங்கள சேவைக்குப் பொறுப்பாக விளங்கும் திரு வசந்தராஜாவுக்குத் தெரியப்படுத்தி இருக்கிறார். தமது இந்த உள்ளக்கிடக்கையை விடுதலைப் புலிகளுக்குக் கூறுமாறும் வசந்தராஜாவிடம் சந்திரிகா கேட்டிருக்கிறார்:

விடுதலைப் புலிகளிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கும் பட்சத்தில் பேச்சுவார்த்தைகளை இப்போதே ஆரம்பிக்க முடியும் என்று வசந்தராஜா நம்பிக்கை தெரிவித்தார். இது விடயத்தில் சந்திரிகாவுக்கு உதவுவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இப்போது சிறிமாவோ என்று கூறப்பட்டாலும், எதிரணி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட இருப்பவர் திருமதி சந்திரிகாவே. எனவே விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய தேவை ஒன்று அவருக்கு உண்டு. விடுதலைப் புலிகளுடன் பேசி ஓர் இணக்கத்துக்கு வந்து இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதில் அவர் முழு விருப்பம் கொண்டவராகக் காணப்படுகிறார்; இது ஏற்கனவே உதயனில் வெளிவந்த தகவல், பி. பி. ஸியின் வசந்தராஜா அதனை ஊர்ஜிதப்படுத்தி இருக்கிறார்.

சந்திரிகா இப்போது அரசாங்கத் தலைவராகப் பதவியில் இல்லை. எனவே நிபந்தனை எதனையும் முன் வைக்காமல் பேசக்கூடிய வாய்ப்பும் உண்டு. தேர்தலுக்கு முன்னர் சந்திரிகா விடுதலைப் புலிகளுடன் பேசி ஒரு இணக்கத்துக்கு வருவது விரும்பத்தக்கது. அவ்வாறு இணக்கத்துக்கு வரப்பட்ட தீர்வுக்கான யோசனையை தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்து சிங்கள மக்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.

அப்போது தான், தமது தந்தைவிட்ட தவறை சந்திரிகாவும் இழைக்காது நேர்மையான அரசியல்வாதியாக வர முடியும்.

வடக்கு-கிழக்கு இணைந்த ஒரு தீர்வுத் திட்டம் குறித்து சுதந்திரக் கட்சி ஆராய்ந்து வருகிறது என்ற செய்தி வெளிவந்ததைக் கண்ட பௌத்த குருமார் முஷ்டியைத் தூக்கிக் கொண்டு நிற்கிறார்கள். பதவிக்கு வந்த பின்னர் விடுதலைப் புலிகளுடன் பேசி ஓர் இணக்கத்துக்கு வரும் சந்தர்ப்பம் உருவானாலும் கூட, சிங்கள மக்கள் அதனை ஏற்கவில்லை என்று கூறிக் குழப்பி விடுவார்கள்! ஐ. தே. கவும் அவர்களோடு சேர்ந்து நிற்கும்; ஏன் தூண்டியும் விடும்!

ஆகையால் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் சந்திரிகாவுக்கு உண்மையான விருப்பமும், ஆர்வமும் உண்டென்றால், அவர் விடுதலைப்புலிகளுடன் இட்போதே பேச வேண்டும். பேச்சின் போது காணப்படும் தீர்வு யோசனையை தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்து சிங்கள மக்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.

விடுதலைப் புலிகளுடனான பேச்சின் மூலம் காணப்படும் தீர்வு யோசனைக்குச் சிங்களமக்களின் அங்கீகாரத்தைப் பெறுவது அவரது கெட்டித்தனத்தைப் பொறுத்தது!

தேர்தலை அண்டி, விஜேதுங்கா, அரச ஊழியர்களுக்கும், விவசாயிகளுக்கும், ஏனைய தொழிலாளருக்கும் பொதுமக்களுக்கும் என்று நாள் ஒரு நலத்திட்டமும், பொழுதொரு நிவாரணமுமாக அறிவித்து வருகிறார்! அவற்றுக்கு எதிராக நீச்சலடித்து தென்னிலங்கை மக்களின் ஆதரவைப் பெற்றுத் தேர்தலில் வெற்றி பெறக்கூடிய திறமையும் சந்திரிகாவுக்குத் தேவை.

இந்த இரு திறமைகளும் இருந்தாலே சந்திரிகாவுக்குச் சாதகநிலை உருவாக முடியும்;

பூநகரி முகாமுக்கு ஏற்பட்ட பேரழிவு:

# 30 படை அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

## இராணுவ நீதிமன்றம் சிபார்சு

கொழும்பு, ஜூன் 17

பூநகரி இராணுவ கடற்படைக் கூட்டுத்தளம் அழிவுக்குப் பொறுப்பான 30 சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இராணுவ நீதிமன்றம் சிபார்சு செய்துள்ளது.

இது இவ்வாறிருக்க—

கடந்த ஆண்டு நவம்பர் முதலாம் திகதி பூநகரி இராணுவ கடற்படைக் கூட்டுத்தளம் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்திய உயர்நிலை இராணுவ நீதிமன்றத்தினால் கண்டிக்கப்பட்ட—

ஆறு சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்குவதை ஓராண்டு காலத்துக்கு இராணுவத் தலைமைப் பீடம் இடைநிறுத்தி வைத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

எனினும்—

இந்த இடைநிறுத்த உத்தரவுக்கு முரணாக அந்த ஆறு அதிகாரிகளில் இருவருக்கு ஏற்கனவே பதவி உயர்வு வழங்கப்பட்டு விட்டது என்று சில வட்டாரங்களை மேற்கோள் காட்டி "த ஐலண்ட்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

பதவி உயர்வு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஆறு அதிகாரிகள் விவரம் வருமாறு:-

மேஜர் ஜெனரல் ரொஹான் தலுவத்தை, பிரிகேடியர் கெமுனு குலதுங்க, பிரிகேடியர் ஜலிய நம்முனி, பிரிகேடியர் எஸ். எஸ். எம். கொத்தேகொட, கேணல் எஸ். டபிள்யு. எம். தவுலகல, கேணல் ரஞ்சித் டீ சில்வா.

பூநகரி அழிவு இடம்பெற்ற சமயம், மேஜர் ஜெனரல் ரொஹான் தலுவத்தை வடபகுதித் துருப்புகளுக்கு கொதுக் கட்டளையிடும் தளபதியாக இருந்தார். பிரிகேடியர் நம்முனி யாழ் பதில் தளபதியாகவும், பிரிகேடியர் கெமுனு குலதுங்க யாழ். தளபதியாகவும் இருந்தவர்.

கட்டளைப்பீடத்தின் எல்லா நிலையிலும் காணப்பட்ட கவனயீனம் காரணமாகவே பூநகரி இராணுவ முகாமை தாக்கி அழிக்க விடுதலைப்புலிகளினால் முடிந்தது என்று இராணுவ விசாரணை நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது.

இராணுவ நீதிமன்றத்தின் விசாரணை அறிக்கை உத்தியோக பூர்வமாக இன்னும் வெளியிடப்படவில்லை. (ஒ-எ)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு அரசாங்கம் தயாராகிறது!

## வாக்குச்சீட்டுகள் அச்சாகின்றனவாம்

கொழும்பு, ஜூன் 17

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்கள், தபால் வாக்குச் சீட்டுக்கள் மற்றும் சகல தஸ்தாவேஜுக்களையும் அச்சிடுவதற்கான உத்தரவை தேர்தல் ஆணையாளர் அலுவலகம், ஸ்ரீ லங்கா அரசின் அச்சகத்திற்கு வழங்கியுள்ளது.

இதன்படி ஒரு கோடியே 25 லட்சம் வாக்குச் சீட்டுக்களும், அதனுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் சுற்று நிருபங்கள் என்பன அச்சிட உத்தரவிடப்பட்டுள்ளதாம்.

1992 இல் இருந்த வாக்காளர் பட்டியலின்படி, ஒரு கோடியே 8 லட்சத்து 22 ஆயிரத்து 142 வாக்காளர்கள் இருந்தனர் என்றும்—

தற்போது சுமார் 10 லட்சம் வாக்காளர்கள் அதிகரித்துள்ளனர் என்றும் — இதற்கேற்ப ஆவணங்கள் அச்சிட உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அறியவருகிறது. (ஒ 9)

# பாகிஸ்தானை இலக்குவைத்து நவீன 'பிரித்வி' ஏவுகணைகள்!

## இவ்வாண்டிற்குள் நிறுத்தப்படும் என புதுடில்லி அறிவிப்பு

இந்தியா தயாரித்துள்ள பிரித்வி ஏவுகணைகள் இந்திய - பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தானை இலக்கு வைத்து எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் இருந்து நிறுத்தப்படும் என்று புதுடில்லியில் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான 3ஆயிரத்து 300 கிலோ மீற்றர் நீள எல்லைப்புறத்தில் பதற்றம் கூடிய பஞ்சாப் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களை அண்டி பிரித்வி ஏவுகணைகள் முதலில் நிறுத்தப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்தியப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

பிரித்வி ஏவுகணை தரையில் இருந்து தரைக்கு 250 கிலோ மீற்றர் தூரத்துக்குச் சென்று குறிப்பிட்ட இலக்கை அச்சொட்டாகத் தாக்கும் வல்லமை படைத்தது என்று பாதுகாப்பு நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இராணுவம் போர்களில் இதனைப் பயன்படுத்துவதற்கு முன்னோடியாக பிரித்வி ஏவுகணைகளை பரீட்சித்துப் பார்ப்பது கடந்த ஆறாம் திகதி ஒரிஸ்ஸா மாநிலத்தில் சண்டிபூர் ஏவுகணை பரீட்சிப்பு நிலையத்தில் ஆரம்பமானது. இப்பரிசோதனைகள் அடுத்த மாத இறுதிவரை தொடரும் என்றும் —

அதற்குப் பின்னர், ஆகஸ்ட் மாதத்தில் இருந்து இந்த ஏவுகணைகளை இந்திய இராணுவம் தமது போர் நடவடிக்கைகளைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நூறு பிரித்வி ஏவுகணைகளைக் கொண்டு இந்தியா பாகிஸ்தான் மீது திடீர் தாக்குதல் ஒன்றை நடத்துமானால் அது பாகிஸ்தானின் போர் வல்லமையை பெரும்பாலும் குறைத்துவிடும் என்று இந்திய பாதுகாப்பு நிபுணர்களை மேற்கோள் காட்டி இந்தியப் பத்திரிகைகள் கருத்துகள் வெளியிட்டுள்ளன. (எ)

## புலிகளின் குரல் வானொலியில்

17 - 06 - 1994
வெள்ளி இரவு

- ★ 8-01 — கலைமஞ்சரி முதலில் நூல் அறிமுகம் "அதிர்ச்சி நோய் எமக்கல்ல" உருவகக் கதை தொகுதி அடுத்து சிறுகதை "உருப்பெறும் உணர்வுகள்" சிறுகதையை அடுத்து கவிதைகள்
  1. "கல்லறையே என் கதை கேளாய்"
  2. உதயத்தை நோக்கிய அவள்
- ★ 8 30 — செய்திகள்
- ★ 8-40 — அரசியல் அரங்கம் "புதிய பொருண்மிய உலகின் நவீன அடிமைகள்"
- ★ 8-50 — வாத்திய கானங்கள்

18 - 06 - 1994
சனி காலை

- ★ 7 02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## போராளிக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 17

கடந்த 10ஆம் திகதியன்று திருமலை மாவட்டத்தில் குச்சவெளி காட்டுப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான கப்டன் சமந்திரன் அல்லது அழகரசன் (சந்திரன் தயாபரன் — 6ஆம் வட்டாரம் சாப்பல் தீவு) வீரச்சாவடைந்தார்.

இவரது வித்துடல் கிடைக்காததால் இவரது திருவுருவப் படம் இன்று பிற்பகல் 3 மணிக்கு அணிவகுப்பு மரியாதைகளுடன் இவரது தற்போதைய இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு இந்தாவில் அ. த. க பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும்; பின்னர் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக் கல் நடப்படும். (எ–5)

## சைக்கிள் திருடன் பிடிபட்டான்

சாவகச்சேரி சந்தையில் விடப்பட்ட புதிய சைக்கிளைத் திறந்து எடுத்துச் செல்ல முயன்ற சைக்கிள் திருடன் சிவில் உடையில் நின்ற காவல்துறையைச் சேர்ந்தவரிடம் கையும் மெய்யுமாக அகப்பட்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

இந்நபர் பருத்தித்துறை காவல் துறையினரால் கடந்த இரு வாரங்களுக்கு முன் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மிட்ரவுண் றோட்டறக்ட் கழகம் யாழ் றோட்டறிக்கழக ஆதரவில் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஐங்கரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.30மணி சாந்தி நிலையம் வி. க. ஏ. அணி எதிர் பல்கலைக்கழகம் வி. க. ஏ. அணி.

★ 4.30 மணி:- கைதடி உதயசூரியன் வி. க. அணி எதிர் கைதடி ஸ்ரீ மகாவிஷ்ணு வி. க. அணி. (உ-10)

★ ★ ★

அரியாலை சனசமூக நிலைய 45 ஆவது ஆண்டு விழாவையொட்டி நடைபெறும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டம் வருமாறு:-

பி.ப 4 மணிக்கு யாழ் வர்த்தக வங்கி அணி எதிர் பொற்பதி 'பி' அணி. (ஒ)

உதவி லஞ்ச ஆணையாளரின்

# அடிப்படை உரிமைவழக்கில் சமரசத்துக்கு அரசு முயற்சி!

கொழும்பு, ஜூன் 17

அமைச்சரவைக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்துள்ள உதவி லஞ்ச ஆணையாளர் விஜய ஹெட்டியாராச்சியுடன் அரசு சமரசம் செய்ய வேண்டும் என்ற யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

லஞ்சத் திணைக்களத்தில் இன்னொரு பிரதி லஞ்ச ஆணையாளர் பதவியை உருவாக்கி, அதற்கு விஜய ஹெட்டியாராச்சியை நியமிக்க வேண்டும் என்பதே அந்த யோசனையாகும்

தமக்கு பிரதி ஆணையாளர் பதவி உயர்வு தராது, லஞ்சத்திணைக்களத்தில் பணியாற்றாத வெளியார் ஒருவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பது தமது அடிப்படை உரிமையை மீறிய செயலாகும் என்றும்—

அதனால் ஏற்பட்ட மன உளைச்சலுக்கு 2 கோடி ரூபா நட்ட ஈடாகத் தர வேண்டும் என்றும் கோரி ஹெட்டியாராச்சி தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுள்ளது தெரிந்ததே

இம்மனுமீதான விசாரணை ஆரம்பமாவதற்கு முன்னர் இது குறித்து நீதிமன்றத்துக்கு வெளியே அரசு சமரசம் செய்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாக ஹல்ஸ்டோர்பில் உள்ள சட்ட நிபுணர்கள் கூறியுள்ளனர்.

அப்படி சமரசம் காணப்பட்டாலும் தமக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்கு நட்டம் கோரும் உரிமையை திரு. ஹெட்டியாராச்சி கைவிடமாட்டார் என்றும் சட்ட நிபுணர்கள் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர். (எ)

# கூட்டுறவு விழாவையொட்டி யாழ். மாவட்டத்தில் போட்டி

யாழ்ப்பாணம் ஜூன் 17

இவ்வருட சர்வதேச கூட்டுறவு தின விழாவையொட்டி யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை தனது அங்கத்தவர்கள், பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள், கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி பயிற்சியாளர்கள் ஆகியோருக்குகிடையே போட்டிகளை நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளது.

பணியாளர்களுக்கு இடையே பேச்சு, கட்டுரை, வினாடி வினா போட்டிகளும்—

ஆரம்ப சங்க அங்கத்தவர்களிடையே பேச்சு, கட்டுரை குழுப்பாடல்கள், கிராமிய நடனம், நாடகப் போட்டிகளும்—

இரண்டாம்படிச் சங்கங்களினூடாக பங்குபற்றும் அங்கத்தவர்களிடையே பேச்சு கட்டுரை, குழுப்பாடல், கிராமிய நடனம், நாடகப் போட்டிகளும்—

கூட்டுறவுப்பயிற்சிக் கல்லூரி மாணவர்களிடையே பேச்சு, கட்டுரைப் போட்டிகளும்—

பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, கட்டுரை, வினாடி வினாப் போட்டிகள் 5 பிரிவுகளாகவும் நடைபெற உள்ளன.

இப் போட்டிகளில் பங்கு பற்ற விரும்புவோர் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இப் போட்டிகள் தொடர்பான மேலதிக விபரங்களை யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையில் அறிந்து கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-162]

## மண்ணின் கனவுகள் வெளியீட்டு விழா

யாழ். மாவட்ட பிரதி ஆணையாளரும் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவருமான திரு. து. வைத்திலிங்கம் எழுதிய "மண்ணின் கனவுகள்" சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். இலக்கிய வட்ட உபதலைவர் திரு. வரதர் முழு விழாவிற்கு தலைமை வகிப்பார். திருவாளர்கள்: சுடர் இ. மகேந்திரன், க. சிதம்பரலிங்கம், சோ. பத்மநாதன், கா. டிவகலாலா, ஐயா சச்சிதானந்தன் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, திரு. கே. பரமேஸ்வரன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி வைப்பர். (எ-111)

## மயானம் புனரமைப்பு

புத்தூர் மேற்கு கிந்திட்டி மயானம் புனரமைக்கப்பட்டுள்ளது.

மயானத்தினுள் நுழையமுடியாத அளவிற்கு வளர்ந்திருந்த முட்பற்றைகள் புதர்கள், அகற்றப்பட்டுள்ளன.

பிரதான வீதியில் இருந்து மயானத்திற்கு செல்லும் உப வீதியும் திருத்தப்பட்டு கிணறு மடம் போன்றவை சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

பத்திரிகை நிறுவனத்தின் மீது

# ரூ. 1 கோடி நஷ்டஈடு கோரி சந்திரிகா அவதூறு வழக்கு!

கொழும்பு, ஜூன் 17

மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க, அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகை நிறுவனத்தின் மீது ஒரு கோடி ரூபா நஷ்டஈடு கோரி அவதூறு வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இத்தாலியத் தூதர் அளித்த விருந்துபசாரம் ஒன்றில் திருமதி சந்திரிகா நடந்துகொண்ட விதம் குறித்து இப்பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகள் தொடர்பாக இந்த அவதூறு வழக்கு தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

அக்கட்டுரைகளில் தம்மைப்பற்றிய விஷயங்கள் திரித்துக் கூறப்பட்டுள்ளன என்று சந்திரிகா தெரிவித்துள்ளார்.

(ஒ-எ)

வட பகுதியில் ஜனாதிபதித் தேர்தல்:

# தேர்தல் ஆணையாளருடன் எதிரணி பேசவேண்டும்!

## பேராசிரியர் பீரிஸ் கருத்து

வட பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்துவது பற்றிய பிரச்சினை குறித்து தேர்தல் ஆணையாளரை எதிரணியில் உள்ள அரசியல் கட்சிகள் சந்தித்து கலந்துரையாட வேண்டும்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் முன்கண்டவாறு தெரிவித்தார்.

வட பகுதியில் தேர்தலை நடத்துவதற்கு என்ன ஒழுங்குகளைச் செய்கின்றீர்கள்? பிரச்சினைகள் ஏற்படும்போது அவற்றை எப்படிக் கையாளுவீர்கள்? என்ற கேள்விகளுக்கு தேர்தல் ஆணையாளரிடமிருந்து எதிர்க் கட்சிகள் பதில் பெறவேண்டும்.

வட பகுதித் தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் எடுக்கும் நடவடிக்கைகள் எதிர்க்கட்சிகளைத் திருப்தி செய்யக்கூடியவையாக இருக்க வேண்டும்.

வெளிநாட்டு அவதானிகளைக் கொண்டுவருவது இதற்கு தீர்வாக இருக்கும் என்று நான் நம்பவில்லை; வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாகவே அது முடியும். சிலவேளை இது நன்மைக்குப் பதில் கூடுதலான தீமைகளையே செய்யக்கூடும்.

நாம் வெளிநாட்டு அவதானிகளை அழைப்பதனால், அவர்கள் ஏதாவது உருப்படியாகச் செய்வார்களா என்பது குறித்து நாம் முதலில் திருப்தி அடைய வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (எ)

தொண்டமானை அழைத்த சட்டத்தரணி பியூகருடன்

# தமிழர் பிரச்சினை பற்றி பேச்சு நடத்த கனடா அரசின் ஆசியபசுபிக் பிரிவுமுயற்சி

இலங்கை—வடக்கு-கிழக்குப் பிரச்சினை பற்றி பேச்சுகள் நடத்த வரும்படி கனடா அரசின் ஆசிய பசுபிக் தெற்கு உறவுகள் பிரிவின் இயக்குநர் மரின் கிறிஸியஸ், கனடா நாட்டு வழக்கறிஞர் மக்ஸ் பியூகரை அழைத்திருக்கிறார்.

"திரு. பியூகருக்கு அனுப்பிய 17 - 05 - 94 திகதியிடப்பட்ட கடிதத்தில் திரு. கிறிஸியஸ் தெரிவித்திருப்பதாவது:

"இலங்கை நாட்டில் தொடர்ந்து நடைபெறும் யுத்தம் பற்றி நீங்கள் அக்கறை காட்டி வருவதால், இலங்கை நிலைவரம் தொடர்பாக இக் கடிதத்தைத் தங்களுக்கு நான் எழுதுகின்றேன்.

"இலங்கைச் செய்திப் பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகளில் இருந்து நீங்கள் காட்டிவரும் அக்கறை எங்களுக்கு தெரிகிறது. சில கட்டுரைகள் இலங்கை பற்றிய உங்கள் நிலைப்பாட்டை கடுமையாக விமரிசித்துள்ளன. குறிப்பாக, இலங்கை அரசுக்கும் தமிழ்ப் பிரிவினைவாதிகளுக்கும் இடையே சமாதானம் ஏற்படுத்த நீங்கள் எடுத்த முயற்சி மற்றும் இலங்கைக்கு தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதற்குக் காட்டியுள்ள எதிர்ப்பு ஆகியன கடுமையான விமர்சனத்துக்குள்ளாகியுள்ளன.

"இலங்கையின் மனித உரிமை நிலைவரம் பற்றிய கனடா காட்டும் முக்கிய பங்கு பற்றி உங்களுக்கு தெரிந்திருக்கும்.

"இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படுவதற்கு கனடா தொடர்ந்து ஆதரவளித்து வருவதும் —

இரு தரப்பினரும் இணங்கும் பட்சத்தில் இப்பேச்சுவார்த்தைக்கு உதவ கனடா முன்வந்துள்ளதும் தாங்கள் அறிந்ததே.

இலங்கையில் .......... பற்றும் நம்பிக்கையீனத்தை அகற்று.......... வதில் நாம் சம்பந்தப்பட்டுள்ளோம்.

இலங்கை நிலைவரம் பற்றி உங்களுடன் கலந்துரையாட நாம் ஆவலாக உள்ளோம். இதற்கு நீங்கள் விரும்பினால் ஒட்டாவாவுக்கு வரும்போது எம்மைச் சந்தித்துப் பேசலாமுங்கள்"— இவ்வாறு இக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. மக்ஸ் பியூகர் இனப் பிரச்சினை பற்றி பேச்சுகள் நடத்த கனடா வரும்படி அமைச்சர் தொண்டமானை அழைத்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (எ)

# அராலி உப அலுவலக பிரிவில் ஆயுள்வேத வைத்தியசாலை

அராலி, ஜூன் 17

வலி. மேற்கு பிரதேசசபையின் அராலி உப அலுவலக பிரிவில் இலவச ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றை அமைத்து மக்களுக்கு சேவையாற்ற பிரதேச சபை விசேட ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இப் பிரதேச சபையின் ஏனைய உப அலுவலக பகுதிகளான சுழிபுரம், சங்கானை வட்டுக்கோட்டை பகுதிகளில் ஏற்கனவே இலவச வைத்திய சாலைகள் இயங்கி வருகின்றன. (இ-12)

**வனம் பேணிட கவனம் செலுத்துவோம்**

**பெறுவதில்லை இனிச் சீதனம் என்று புதுவிதி ஒன்று படைத்திடுவீர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். ஸ்ரீதரில்

இன்று முதல்
ARNOLD SCHWARZENEGGER
நடித்த
PREDATOR
தினசரி மாலை 4 6 மணி
சனி, ஞாயிறு காலை 10-30
மாலை 4 6 மணி

24 வெள்ளி முதல்
STEVEN SPIELBERG இயக்குதலில்
RICHARD ATTENBOROUGH
நடித்த
JURASSIC PARK
[கி-8508]



## கலாலயாவின்

மனைப்பொருளியலும், கைத்திறனும்
பொருட்காட்சி

- உள்ளூர் உணவுகள்
- தைத்த ஆடைகள்
- கைப்பணிகள்
- செயற்கை மலர்கள்
- கேக் அலங்காரம்

காலம்: ஜூன் 18 ஆம், 19 ஆம், 20 ஆம் திகதிகளில்
நேரம்: காலை 10 – மாலை 6 வரை
இடம்: விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
[கி-8285]



வேம்படி பழைய மாணவர் ஒன்றுகூடல்
90 ஆவது ஆண்டு நிறைவு
வேம்படி மகளிர் கல்லூரி
160 ஆவது ஆண்டு நிறைவு
ஆண்டுப் பொதுக் கூட்டம்

1994 - 07 - 03 ஞாயிற்றுக்கிழமை
இடம்:- மேபிள் தம்பையா மண்டபம்

9 - 00 கல்லூரிக் கொடி ஏற்றல்
9 - 40 வரவேற்புரை
9 - :0 காப்பாளர் உரை
10 - 00 பிரதம விருந்தினர் உரை
(வைத்திய கலாநிதி செல்வி என். கனகரெத்தினம்
10 - 0 சிறப்பு விருந்தினர் உரை
செல்வி. ஆர். ராஜரட்ணம்
10 - 20 25 வருடகாலம் வேம்படியில் கடமையாற்றிய ஆசிரியர்களைக் கௌரவித்தல்
10 - 30 கூடைப்பந்தாட்டம்
பழைய மாணவர் — ஆசிரியர்
11 - 30 வருடாந்தப் பொதுக்கூட்டம்
12 - 30 மதிய விருந்து
01 - 45 கலை நிகழ்ச்சிகள்
03 - 30 அதிபர் தேனீர்
பாடசாலைக் கீதம்

★ பழைய மாணவியரும் துணைவரும் மதிய விருந்தில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள். இதற்குரிய பற்றுச்சீட்டுக்களை (10ı/-) 28-6-94 இற்கு முன் கல்லூரியில் பெற்றுக் கொள்ளவும்.
★ வேம்படியில் 25 ஆண்டுகள் கடமையாற்றிய ஆசிரியர்கள் தயவு செய்து உடனடியாகச் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.
★ பிரேரணைகள் சமர்ப்பிக்கவிரும்பின் எழுத்து மூலம் 27-6-94 இற்கு முன் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.

செல்வி. ச. தருமலிங்கம்
செயலாளர்
(சி/8509)


## மரண அறிவித்தல்

### நாகநாதி ஐயம்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியர்)

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்புத்துறை மணியம்தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய நாகநாதி ஐயம்பிள்ளை நேற்றுக் காலமானார்.

இவர் தெய்வானைப் பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு (பொலீஸ் அதிகாரி), திலகவதி, புனிதவதி, திருஞானக்கரசு, அமிர்தாம்பிகை, ஒப்பிலாவதி, சாந்தவதி, சிவசுந்தரம், காலஞ்சென்ற மணிவாசகம் (மாவீரர்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று மாலை நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
ஐ. தெய்வானைப்பிள்ளை
(மனைவி)
இலக்கம் 46, 1 ம் குறுக்குதெரு,
மணியம் தோட்டம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
(31451)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 393/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17-06-1994 ல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

தேர்தலுக்கு ஆதரவு கோருகிறார்

# தமிழ், முஸ்லிம் மத தலைவர்களுக்கு ஜனாதிபதி டி. பி. தமிழில் கடிதம்!

கொழும்பு, ஜூன் 17

ஜனாதிபதி டி. பி. விஜெதுங்கா இந்து— இஸ்லாமிய மதத்தலைவர்களுக்கு தனித்தனியாக அனுப்பிவைத்துள்ள கடிதங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகத் தாம் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ள தகவலைத் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் மொழியில் அனுப்பப்பட்டுள்ள இக்கடிதத்தில் நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தமக்கு ஒத்துழைப்பைத் தந்துதவுமாறு அவர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

"மிக நெருக்கடியான வேளையில் நான் ஜனாதிபதி பதவியை ஏற்றேன். இன்று சமாதானத்தையும் உறுதிப்பாட்டையும் நிலைநாட்ட வேண்டும். இதேவேளை தங்கு தடையின்றி நாட்டின் வளர்ச்சிப் பணிகள் இடம்பெறவேண்டும். இச்சவாலை ஏற்பதற்கு முதிர்ந்த அனுபவமும் நற்பண்பும் வாய்க்கப்பெற்ற தலைவர் ஒருவர் இப்போது தேவைப்படுகிறார் என்பதை ஏற்றுக் கொள்வீர்கள்"— இவ்வாறு அக்கடிதத்தில் அவர் தெரிவித்திருக்கிறார்.

இது போன்ற ஒரு வேண்டுகோளை ஜனாதிபதி பௌத்த சமயத் தலைவர்களுக்கு ஏற்கனவே அனுப்பிவைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெறுமதி மிக்க முத்திரைகள் கொழும்பில் இருந்து வந்தன

பெறுமதி வாய்ந்த 50ரூபா, 100ரூபா, 500ரூபா, 1000 ரூபா முத்திரைகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

கொழும்பில் இருந்து நேற்று யாழ். திரும்பிய வடமாகாண பிரதி தபால் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் இம்முத்திரைகளைத் தம்முடன் எடுத்து வந்தார்.

இம்முத்திரைகளை யாழ். பிரதம தபாலகம் உட்பட கண்டிக்குளி, வண்ணார்பண்ணை, சாவகச்சேரி, பருத்தித்துறை, சுன்னாகம் போன்ற தபாலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் இம்முத்திரைகளுக்கு நிலவிவரும் தட்டுப்பாடு நீங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ-162)

## கிளிநொச்சிப் பகுதியில் கொள்ளை முயற்சிகள்

கிளிநொச்சி, ஜூன் 16

கிளிநொச்சிப் பகுதியில் தற்போது கொள்ளை முயற்சி சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த வியாழக்கிழமை இரவு கரடிப்போக்கில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் துப்பாக்கி ஏந்திய நபர்களின் கொள்ளை முயற்சி முறியடிக்கப்பட்டது.

அயலவர்கள் கூடியதால் கொள்ளையர்கள் துப்பாக்கி பிரயோகம் செய்துவிட்டு தப்பி ஓடினர்.

இதே போன்ற ஓர் முயற்சி இரத்தினபுரத்தில் உள்ள பரமசாமி என்பவரின் வீட்டிலும் மேற்கொள்ளப்பட்டது.

கொள்ளை முயற்சி சம்பவங்கள் அந்தப் பகுதிகளில் மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. (இ-76)

மேல்மாகாணசபை கலைக்கப்பட்டால்

## அரசுக்கு நெருக்கடி வரும்; சந்திரிக்கா எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 17

மேல் மாகாணசபையின் நிர்வாகத்தை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றுமாயின் சபையைக் கலைத்து விட்டு தேர்தலை நடத்துமாறு தாம் அரசுக்கு நெருக்கடி கொடுக்கப்போவதாக முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா எச்சரித்திருக்கிறார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேல் மாகாணசபையில் உள்ள ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்களில் 10 பேரின் ஆதரவு தமக்கு ஆதரவாக உள்ளனர் என்று தெரிவித்த சந்திரிகா, முன்னணியின் இரண்டு அல்லது மூன்று பேர் தான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்கின்றனர் என்றும் கூறினார்.

மேல் மாகாண சபையின் தற்போதைய நிர்வாகத்தில் குறிப்பிட்ட காலம் வரை மாற்றம் ஏற்படாது என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மேல்மாகாண ஆட்சியை மாற்றுவதற்காகவே ஆளுநர் மாற்றப்பட்டார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட

## மாணவர் சீருடைத்துணி அடுத்த வாரம் வருகிறது!

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ். மாவட்ட மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் அடுத்த வாரம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ள கோமாரி கப்பலில் எடுத்து வரப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான அனுமதியை பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு வழங்கியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கொழும்புத் துறைமுகத்தில் பொருள்களை ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ள 'காமாரி' கப்பலில் சீருடைத் துணிகளும் ஏற்றப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## இன்னல்களுக்கு மத்தியில் பணிபுரிந்த பேராசிரியர்!

### சிறந்த பல்கலைக்கழக துணைவேந்தர் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 17

பல இன்னல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் மத்தியில் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியை பேராசிரியர் துரைராசா ஒரு சவாலாகவே ஏற்று செயற்பட்டு வந்தார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் தயாநித்த விஜயசேகரா தமது அனுதாபச் செய்தியில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

இலங்கை திருநாடு தந்த மிகச் சிறந்த பொறியியலாளர்களில் ஒருவரான அவர் இந்த நாட்டுக்கு பல நூறு பொறியியலாளர்களை உவித்துள்ளார்.

அன்னாரின் அறிவியல் வளமை, அன்பான அனுபவரீதியான ஆலோசனைகள், நாட்டிற்குப் புரிந்த சேவைகள் எம் மத்தியில் என்றும் நிலைத்திருக்கும்.

இந்தப் பெருந்தகையின் மறைவு குறித்து திறந்த பல்கலைக்கழகத்தின் அனைத்துத் துறைகளைச் சார்ந்த உத்தியோகத்தர்களும் மாணவர்களும் காட்டிய ஆழ்ந்த அனுதாபமும் அக்கறையும் வியக்கத்தக்கதாக இருந்தது.

இவ்வாறு அந்த அனுதாபச் செய்தியில் குறிப்பிடப்பட்டு ... முன்தினம் இடம்பெற்ற இரங்... ...பட்டது. (எ)

பொலீஸ்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
றும் ஐந்து பொலீஸார் படுகாயமடைந்தனர் என்றும் காவல் நிலையம் முற்றாக எரிக்கப்பட்டது என்றும் இந்திய வானொலி அறிவித்தது.
(ஓ-எ-5-6)

சுதந்திரக்கட்சி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பெரேரா அம்மையின் தேசியப் பட்டியலில் எம்.பியாகப் பட்டதைத் தொடர்ந்து, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியுடன் ஐக்கிய தேசியக் கட்சி இணைந்து புதிய நிர்வாகம் ஒன்றை அமைக்கலாம் என்று அரசியல் வட்டாரங்களில் பரவலாக எதிர்பார்க்கப்பட்டு வந்த சமயத்தில் பிரேமச்சந்திரா ... கட்சியினர் ... இடம் பெற்றிருப்பது ... து. (இ-எ-6)

## கரப்பந்தாட்ட கழகங்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

சகல கரப்பந்தாட்ட (ஓவர் கேம், செற்றப்) கழகங்களையும் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் பதிவு செய்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுள்ளது.

பதிவு செய்துகொண்ட கழகங்கள் மட்டுமே எதிர்காலத்தில் கற்றுப் போட்டிகளை நடத்தவும், அவற்றில் பங்குபற்றவும் அனுமதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான படிவங்களை யாழ் மாவட்ட கரப்பந்தாட்டச் செயலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. (ஓ)

## முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 17

தேசிய கல்வி நிறுவக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை குறிப்பிட்ட நேரசூசிப்படி நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறுமென யாழ். இந்து மகளிர் கல்லூரி நிலைய சிரேஷ்ட விரிவுரையாளர் அறிவிக்கின்றார்.

## நாளை

யாழ்-கொட்டடி மத்தி சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் முதலாவது கடன் வழங்கும் விழா நாளை சனிக்கிழமை மாலை 4மணிக்கு கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் நடைபெறும். (ஓ-162)

★ ★ ★

யாழ் கல்வித் திணைக்களம் வலயம் இரண்டைச் சேர்ந்த பாடசாலைகளில் ஆண்டு 6 முதல் 11 வரையான வகுப்புகளில் சமயபாடம் போதிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால கருத்தரங்கு நாளை இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது (எ-1 52)

பேச்சுக்கான...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சமாதானக் குழுக்களிடம் எமது நிலையைத் தெளிவுபடுத்தியுள்ளோம். ஆனால் ஸ்ரீலங்கா அரசாங்கம் சமாதானத்துக்கான எமது கோரிக்கைகளை நிராகரித்து வருகிறது இதுவரை எந்த ஒரு நல்லெண்ண அறிகுறிகளையும் அரசு காட்டுவதாகத் தெரியவில்லை.

எமது மக்களுக்கான உரிமைகள் வழங்கப்பட்டு மக்கள் சுதந்திரமாக உரிமையுடன் வாழ்வது உறுதி செய்யப்படும் வரை எந்த ஒரு தேர்தலும் இந்த மண்ணில் நடப்பதை எமது மக்கள் விரும்பப்போவதில்லை. எனவே இங்கே தேர்தல் நடப்பதை நாம் அனுமதிக்கப் போவதில்லை.

தற்போது போரில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று சொல்ல முடியாது பெரிய யுத்தத்துக்கான ஆயத்தங்களை அரசு செய்து வருகிறது.

இராணுவ துக்குப் போர் பயிற்சிகளைக் கொடுப்பதுடன் வெளிநாடுகளில் இருந்து பெருந்தொகையிலான ஆயுதங்களை வாங்கி குவித்து வருகிறது

எம்மைப் பொறுத்த வரை எம் மண்ணைக் காக்கும் நோக்கில் ஒரு பாதுகாப்பு யுத்தத்துக்கு நாமும் தயாராகி வருகிறோம்.

யாழ் குடாநாட்டில் மட்டுமல்ல எமது கட்டுப்பாட்டில் உள்ள எல்லாப் பகுதிகளிலும் நாம் சிவில் நிர்வாக அமைப்புகளை ஏற்படுத்தி வருகிறோம் தமிழ் பகுதிகளில் அரசின் நிர்வாக இயந்திரம் பெருமளவில் சீர்குலைந்துள்ளது. இந்த நிலைமையை சீர்செய்து எமது மக்களின் அன்றாட தேவைகளை நிறைவேற்றும் நோக்குடன் நாம் எமது நிர்வாக அமைப்புகளைக் கட்டியெழுப்பி வருகிறோம்.

இன்றைய சூழ்நிலையில் ... தேவையாக உள்ளது.

இப்படி திரு. தமிழ்செல்வன் மேலும் தெரிவித்தார்.

## நவிண்டில் பழைய மாணவர் சங்க விழா

யாழ்ப்பாணம், ஜூன் 17

கைதடி நவிண்டில் செவிப்புலனிழந்தோர் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் 27 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக்கூட்டமும் நாளை சனிக்கிழமை காலை 8 30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

விழாவுக்கு சங்கத் தலைவர் திரு க. இரத்தினேஸ்வரன் தலைமை வகிப்பார்.

யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் திரு கரிகாலன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (இ)

இராணுவ நடவடிக்கைகளுக்காக

## தனியார் பஸ்களை படையினர் பாவிக்க கடும் எதிர்ப்பு

### பொலன்னறுவையில் சம்பவம்

கொழும்பு ஜூன் 17

தனியார் பஸ்களை இராணுவத்தினர் இராணுவ நடவடிக்கைக்கு என்று கூறி முன்னறிவித்தலின்றி எடுத்துச்செல்வதை பொலன்னறுவையில் உள்ள தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் எதிர்த்துள்ளது.

கடந்த வாரம் கதுருவெல கிராமத்தில் இராணுவத்தினர் தனியார் பஸ் ஒன்றை எடுத்துச் செல்ல முயற்சித்தபோது அப்பஸ்ஸின் சாரதியும் கண்டக்டரும் அதனை எதிர்த்தனர். இராணுவத்தினர் சாரதியையும் கண்டக்டரையும் நன்றாகத் தாக்கிவிட்டு அவர்களை பஸ்ஸுடன் மின்னேரி இராணுவ முகாமுக்குக் கூட்டிச் சென்றனர் என்றும்—

அவர்களுக்குப் பின்னர் என்ன நடந்தது என்பது தெரியவில்லை என்றும்— பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் பற்றி பூரண விசாரணை நடத்தும்படி கோரி பஸ்சாரதிகள் முறையிட்டுள்ளனர்.

இந்த விஷயம் வடமத்திய மாகாண முதலமைச்சர் ஜி.டி. மஹிந்த சோமாவுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (எ)

பிரச்சினைக்குரிய

## ஹெர்குலிஸ் விமானங்களை விமானப்படை வாங்கவில்லை

### அமைச்சர் அறிவிப்பு

சி-130 ஹெர்குலிஸ் ரக ராட்சத போக்குவரத்து விமானங்களை கொள்வனவு செய்வது தொடர்பான ஒழுங்குகளை இலங்கை விமானப்படை மேற்கொள்ளவில்லை.

அமைச்சர் விஜல் விக்கிரமசிங்கா கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக கொழும்பு மாவட்ட ஐ.தே.க. எம்.பி சி. வி. குணரத்னா கேள்வி கேட்டிருந்தார்.

சம்பந்தப்பட்ட உறுப்பினர் பிழையான தகவலின் அடிப்படையில் இக்கேள்வியை எழுப்பியுள்ளார் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

குணரத்ன: பொருத்தமான தகவல்களைத் தந்தால் அது பற்றி விசாரணை நடத்த ஆணைக்குழு ஒன்றை நியமிப்பீர்களா?

டாக்டர் விக்கிரமசிங்கா: நான் அது பற்றி பரிசீலிப்பேன். (எ)

ஐ. தே. க வுடன் சேர்ந்தால்

## வடமேல் மாகாண ஆட்சியை கவிழ்க்க பொ. ம. மு. சபதம்

கொழும்பு, ஜூன் 17

வடமேற்கு மாகாண சபையின் நிர்வாகம் ஐக்கிய தேசியக்கட்சிக்குக் கைமாறுமாயின் அதனை ஒரு மாதத்துக்குள் கவிழ்த்து விடப் போவதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எச்சரித்துள்ளது.

வடமேற்கு மாகாணசபையில் உள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர்களின் தலைவரும், மாகாண கல்வி அமைச்சருமான எஸ் பி நாவின்ன இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

வடமேற்கு மாகாணசபையின் நிர்வாகம் தற்போது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியும் சேர்ந்து நடத்தி வருகின்றன

முதலமைச்சராக இருக்கும் ஜி எம். பிரேமச்சந்திராவின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இம் மாகாணசபையில் உள்ள ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களுடன் சேர்ந்து கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-6)

## சென் ஜோன் அம்புலன்ஸ் தினம்

யாழ். மத்திய கல்லூரியின் "சென்ஜோன் அம்புலன்ஸ் சங்கமும் படையும்" இன்று வெள்ளிக்கிழமை சர்வதேச சென் ஜோன் அம்புலன்ஸ் தினத்தை கொண்டாடுகிறது.

இன்று பிற்பகல் 1.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் வைத்திய கலாநிதி எஸ். பி. ஆர். சிர்மாறன் தலைமையில் வைபவம் இடம்பெறும்.

## ஆலயங்களில்

தென்மராட்சி, ஜூன் 17

வடமராட்சி கிழக்கு குடாரப்பு புன்னையடி வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை இரவு ஆரம்பித்து நாளை சனி காலை அன்னதானத்துடன் நிறைவுபெறும். (ஓ-117)

பிரேமச்சந்திரா...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
காலத்தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இத்தடை உத்தரவு இம்மாதம் 30 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் என்றும் நீதிமன்றம் தனது உத்தரவில் தெரிவித்துள்ளது.

சட்டத்தரணி ஏ. வி. குணரத்னா தொடர்ந்த வழக்கு தொடர்பாகவே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது திரு. பிரேமச்சந்திரா உட்பட 11 பேர் பிரதிவாதிகளாகக் காட்டப்பட்டுள்ளனர். (இ-எ-6)

## கிணற்றிலிருந்து இருவர் மீட்பு குழந்தை மரணம்

கிணற்றில் இருந்து மீட்கப்பட்டதாக ஆண் குழந்தை ஒன்றின் சடலம் நேற்று இரவு யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

கிணற்றில் இருந்து உயிருடன் மீட்கப்பட்ட இக்குழந்தையின் தாயார் தலைமறைவாகியுள்ளார். இறந்த குழந்தையின் சகோதரியான 10 வயதுச் சிறுமியும் கிணற்றில் இருந்து உயிருடன் மீட்கப்பட்டார்.

தலைமறைவாகிய தாயாரைத் தேடித் திரிந்தவர்களில் ஒருவர் பாம்புக்கடிக்கு இலக்கானார்.

கோப்பாய் தெற்கு கட்டைப்பிராயில் நேற்று மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ம. நவரத்தினராசா [வயது 2] என்ற ஆண் குழந்தையே சடலமாக மீட்கப்பட்ட குழந்தையாகும்.

இருபாலை கிழக்கைச் சேர்ந்த கணேசபிள்ளை சிவகரன் (வயது 26) என்ற இளைஞனே பாம்பினால் கடியுண்டவர் ஆவார். (இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org